34

உ

சிவமயம்.

மரகதவிநாயகர் சகாயம்.



OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS.
73

# சந்தக்கும்மி.

734
2.14

இஃது

இராமநாதபுரம் சிவகெங்கை உபய சமஸ்தான வித்வானும்
வன்றொண்டரவர்கள் மாணாக்கருமாகிய
வேம்பத்தூர்,
சிலேடைப்புலி ஸ்ரீமத் பிச்சுவையரவர்கள்குமாரர்
**மஹாதேவையரவர்களால்**
தேவகோட்டை ஜமீந்தார் மகா-ள-ள-ஸ்ரீ அள. அரு.
ராமசாமிசெட்டியாரவர்கள் குமாரர்
**நாராயணன்செட்டியாரவர்கள்பேரில்**
இயற்றப்பெற்று

---

ஷெயாரவர்கள்,
**தேவகோட்டை**
...டேட் பிரஸில் அச்சிடப்பெற்றது.

---

1914.

O-85MMDS,N
NH4
148166

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

---

இஃது திருவாவடுதுறையாதீனக் கர்த்தராகிய பிரம்மஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்களின் மாணாக்கரும் சிவகெங்கைசமஸ்தான ராஜகுருபீட கர்த்தருமாகிய பிர்மஸ்ரீ

## தேவசிகாமணியையரவர்களால் இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்வளர் நிம்பை நகரினில் வாழெந்
திருமலி வேதியர் குலத்தோன்
தார்வள ரரசர் தயவெலாங் கொண்ட
தக்கவன் சதுர்மறை யாளன்
கார்வளர் கொண்மூ வெனக்கவி பொழியக்
கற்றவன் கற்றவர்க் கினிப்போன்
நார்வள ரகத்தாற் கடவுளைத் துதித்தே
நல்லகுண மிகக்கொளும் நலத்தான்

கமலைவாழ் முகமு மகமுமே கொண்ட
கற்றவர் சிகாமணி யெனற்காம்
விமலனும் சமஸ்தா னேபயச் சிலேடை
விளங்கிடு புலியென வியந்தே
யமலமா யாரு மறைந்திடு தகுதி
யமைந்துறு பிச்சுபூ சுரன்றன்
குமலநீங்கிடு நற்சுதன் மஹாதேவன்
குவலயத் தெமது நன்னண்பன்

இருமலர் மானுஞ் சாமரை கொள்ள
விசைந்த பேரிசைக் கவிராஜ
மருமலர்த் தார்சேர் பண்டிதர் குலத்தில்
வந்தவன் றேவிகோட் டையின்வாழ்
தருநிகர் காத்துத் தனவணி கேந்த்ர
சம்பன தபாநிதியான
திருவளர் நாரா யணக்குரி சிலின்மேற்
செய்தமிழ்க் குமிசிறப் பினதே.

காரைக்குடி ராம. சொ சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள்
மாணாக்கருளொருவராகிய

## சொ. வேலுச்சாமிக்கவிராயர் இயற்றியது

வெண்பா.

சீராரு நிம்பை திகழ்பிச்சு வையனெனப்
பேராரு மாவித்வான் பெற்றெடுத்த—பாராருஞ்
சீர்த்தி மகாதேவன் செப்பினான் கும்மியொன்று
பார்த்தி பருமதிபண்பான்.

யார்மே லெனிற் றேவை ராமசா மிப்பெயர்வாய்
தார்வாழ் புயஜமீந் தார்புதல்வ—னீர்சூழ்
நலங்கொள் நரா திபநா ராயணன்மேற்
றுலங்குபபடிக்கி மகிழ்ந்து.

---

இஃது சிவகெங்கை ஸ்கூல் தமிழ்ப் பண்டிற்றும் ஷை சமஸ்தான
வித்துவானுமாகிய

## கணபதியாபிள்ளையவர்களியற்றியது.

நேரிசை வெண்பா.

கண்டோ தேனோமுக் கனியோ வெனக்கவிஞர்
கொண்டாடக் கும்மியொன்று கோகனகத்—தண்டார் சேர்
மாதேவ மால்தேவை வாழும்நா ராயணவேண்
மீதே சொன் னான்மதிக்கவே.

---

இஃது வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்
மாப்பிள்ளையும் சவுந்தரபாரதிகள்
மாணாக்கருமாகிய

## கோவிந்தமையரியற்றியது.

நேரிசை வெண்பா.

செப்பினா னிம்பைமஹா தேவன் கவிவாண
ரொப்பி மிகவு முவந்திடவே—திப்பியமாய்ப்
பூமான்வாழ் தேவைப் புகழ்மிகுநா ராயணநற்
கோமான் மேற் சந்தக் கும்மி.

ஆவணக்காப்பக நூலகம்
148166
சென்னை-600 008.
1554
2.14
G-85 MMDS/A N14

உ

கற்பகந்துணை.

# சந்தக்கும்மி.

காப்பு, நேரிசை வெண்பா.

சீரார்பூஞ் சோலைவளஞ் சேர்தேவ கோட்டையில்வாழ்
பேரார்நா ராயணன்மேற் பேசுகுமிக்—கோராருங்
காமருவுப் பூர்வெயிலு கந்தவிநாயகரின்
பூமருவு தாளிணைகாப்பு.

சீர்பொருந்துந் தேவ கோட்டையின் மேவிய
சீமா னாராயணன் மேற்குமிக்குச்
சிரசிற்குளிர் மதியைப்பல வலையைத்தரு நதியைப்புனை
சித்திவிநாயகன் றுடுணையே. (1)

நாவலர்போற்றுந் தேவைப்பதி மேவிய
நாரணன்மேற் குமிப் பாட்டுரைக்க
நலமுற்றிடு தமிழைத்தரு பொதிகைத்தவ முனிவர்க்கரு
ளுயகனு முருகன்றுணையே. (2)

கற்பகம்போலக் கொடுக்கும் நாராயணக்
காவலன்மேற் குமிப் பாட்டுரைக்கக்
கமலத்தவர் மகிழுப்பல ககனத்தவர் புகழப்புரி
கானசரஸ்வதி காப்பாமே. (3)

காவலர் மெச்சு நாராயணனுகிய
காண்டீபன்மேற் குமிப் பாட்டுரைக்கக்
கருதுற்றவர் கலியைத்தவிர் கருணைக்கடல் கயமுற்பணி
காளீசர் பாத மலர்துணையே. (4)

மன்னன் நாராயண வள்ளலின் மேற்குமி
வகுக்க மாற்றா ரைஞ்ஞூற்றீசர்
மகரந்தமி லகுசுந்தர மணமிஞ்சிய குளிர்பங்கய
மலர்ப் பதங்களுங் காப்பாமே. (5)

மாநிலத்து மனு நீதிவழுவாது
வாழுநா ராயணன் மேற்குமிக்கு
மறைமுற்றுணர் தருவிப்பிரர் மகிழத்தின மனமிட்டருள்
வைக்கத் தப்பன் பதங்காப்பாமே. (6)

நாற்றிசை போற்றுநா ராயணன்மீதினில்
நாட்டுங் குமித்தமிழ்ப் பாட்டுரைக்க
நணுகித்துதி பணுமுத்தமர் நலமுற்றிட மனம்வைத்தருள்
ராமனுதர் பதங் காப்பாமே. (7)

ஆறுமுகவடி வேலவனைத் தொழு
மன்பன் நாராயணன் மேற்குமிக்கு
யசுரப்படை வெருளத்திரி மகிடக்கய வனைவெற்றிகொள்
அம்பிகை பொற்பதங் காப்பாமே. (8)

மானிலத்திற் புகழ் மேவுநாராயண
மன்னவன் மேற்குமிப் பாட்டுரைக்க
மதுவைப்பொழி துளவைப்புய மலையிற்புனை தருவித்தக
மாதவன் பொற்பதங் காப்பாமே. (9)

நந்தணி செங்கை யிராமனெனவந்த
நாரணன்மேற் குமிப் பாட்டுரைக்க
நளினத்திரு மயிலொத்துரை சசியைப்புக வியின்வைத்தரு
ளுந்தக வையன் பதந்துணையே. (10)

தாடகை தன்னைமுன் வென்றநாராயண
சம்பனன் மேற்குமிப் பாட்டுரைக்க
சமணப்பெரு விருளைப்பொர வனசத்திறை யெனவுற்றிடு
சம்மந்தர் மூவர் பதந்துணையே. (11)

வாலைமுருக்கி யெழுபுலி வேங்கை
வணங்கு சாபத்தின் முன்புநின்று
கோலைவிடவிழுந் தோடுமொரு முயற்
குட்டி வினவத் துடங்குதல்போல். (12)

எக்கலையுந்தெரி பாவல ரேயும்
இடத்தி லியம்புமென் புன்றமிழை
இக்கெனக் கேட்டு மகிழ்ந்திடுவீர் குற்ற
மென்ன விருந்தாலு மன்புவைத்தே. (13)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 MAY 1914
MADRAS.

வாசத்துயர்ந்த மலரிற் செந்தாமரை
வையகத் தோங்கும் விதம்போலத்
தேசத்துயர்ந்து வளர்தரு பாண்டிய
தேச மகிமையைக் கேளுங்கோடி. (14)

சோலையிற் செங்கனி விண்டோடும் நறை
சூழ்ந்து வயல் வரம்பைச்சாடும்
ஆலையிற் றண்கருப் பஞ்சாறே வழிந்
தப்புறத் தோடி வருமாறே. (15)

வேலையினீரை மிகக் குடிக்குங் கரு
மேகத்தைக் கண்டு மயில்நடிக்கு
மாலைநிகர் முகின் வானேடுங் கரு
மாங்குயி லஞ்சியே வாய்மூடும். (16)

மாரன்சிலைகமு கைநிகருந் தென்னை
மரத்திற் கிள்ளை மறைபகருஞ்
சாரமிருந்த சுளைப்பலவே கற்ப
தருவு மஞ்ச வெழும்பலவே. (17)

தாமரைமீதி லனம்பாடு மதைச்
சார்ந்திடும் வண்டு சுதிகூடும்
மாமரத்திற் குளச் சேல்பாயு மந்த
மரத்துக் குள்ள வடுவேயும். (18)

மாதங்க மோடிக் கரும்பொடிக்குந் தின
மன்னிய முத்து மிகவெடிக்குஞ்
சீதளமஞ்சள் கதலியொக்குந் தென்னந்
தேங்கனியைக் கவி போயுருக்கும். (19)

மாதர்நடைகண் டனமோடு மயில்
மான்களின் சாயல்கண் டேவாடும்
போதடர் வாவியிற் சங்கமே வலம்
புரி முத்தந்தருஞ் சங்கமே. (20)

மாணிக்கஞ் சூரியன் போற்சொலிக்கும் பச்சை
மானிறங் காட்டிப் பிரபலிக்கும்
வாணிக் கிருப்பிடத் தைக்காட்டும் வயல்
வரம்பி னிஞ்சி தலைநீட்டும். (21)

மாசத்தின் மூன்று மழைபொழியுஞ் செல
மானது பொங்கி மதகிழியும்
கோசல நாடுங்கண் டஞ்சுமே யெவர்க்
குங்கொடுக் குஞ்செல்வ மிஞ்சுமே. (22)

பச்சை மாகதம் போலிலங்குஞ் செந்நெற்
பயிர்தழைத்து மிகத் துலங்கும்
அச்சுதன் போற் றண்டலையோங்கும் வந்
தடுத்தவர்க் குக்கலி நீங்கும். (23)

ஆகமவேதஞ் சொலுஞ் சுகமே மறை
யந்தணர் செய்வர் தினமகமே
மாகநடுங்க மலைபொடிப் பாரனு
மானு மஞ்சக் கலைபடிப்பார். (24

பாவலர் தமை யாதரிப்பா ரவர்
பாவினிற் கீர்த்தி தனைவிரிப்பார்
ஆவலுடனரனைத் துதிப்பா ரா
கரவென்றே தினமுங் குதிப்பார். (25)

பாண்டியதேச வளத்தினைச் சேடனும்
பாடத் துணியின் முடியாதே
காண்டிப மொத்த நுதலாரே தேவைக்
காக்ஷி மிகுந்த வளமதனை. (26)

கற்றவளவிலறிந்து சொல்வே னதைக்
காரிகையீர் கொஞ்சங் கேளுங்கோடி
உற்றசதுர் மறையுந்தொனிக்குந் தெரு
வூடுசென் றூருக்கின்பஞ் செனிக்கும். [27]

வீடுகடோறு நிறைதனமே வரு
விருந்தினர்க் கிடுவா ரனமே
பாடும் புலவரைநாடியே சொன்ன
பாவுக்களிப்பார் பொன்கோடியே. [28]

பக்கமெங்கு பலரோடையே சிவ
பத்தரொக்கும் வெள்ளை மேடையே
செக்கச் சிவந்தமணியாலே ரெத்ந
தீபம்வைப் பார்கண்மனை மேலே. [29]

சந்திரகாந்த மதிக்குருகும் வயற்
சாலிகளோங்கச் செலம் பெருகும்
கந்தமல ரணைமேல் விரிப்பார் கற்ப
கக்கனியைக் கையினாற் பறிப்பார் [30]

பாவலர்சொல் கற்பகநாட்டை யெட்டிப்
பார்க்குங் கனதை மிகுங்கோட்டை
காவலர் சூழ்கட லேழுமே யகழ்
காணிற் றினம்வந்து தாழுமே. [31]

கட்டிய கோபுரமேருவே கண்டு
கைதொழுங் கற்பக தாருவே
அட்டியிலா தர்ச்சனை நடக்குஞ் சிவ
னாலய மன்பர் வினையடக்கும். [32]

கீதமொருபு ரத்தின்முழங்கு மிசை
கேட்பவர் கைகள்செம் பொன்வழங்கும்
மாதவர்க் குப்பிச்சை பண்ணிவைப்பார் துரு
மார்க்கரைக் காணின்மனது கைப்பார். [33]

மாதங்கச் சும்மைபரி யோசை மட
மான்களி ஞேசை மயிலோசை
சீதள வீதியின் மீதுமே மூா
சின்னெலி யாலவை மாறுமே. [34]

காவண மெங்கணும் வித்தாரந் தொங்கக்
கட்டுவர் காணணி முத்தாரம்
ஆவண வீதிகளும் பலவே வா
வத்தனையுந் தருமச் சிலவே. [35]

போனவிடத்தினிற் கூடியே யரிப்
போர்க்குக் கிடைக்கும்பொன் கோடியே
தானந்தவஞ் செய்திடச் சலியார் தன
தனுங்கண் டஞ்சத் தரும்வலியார். [36]

சுப்பிரமஞ்சத்தி லாடுவார் கந்
தருவர் பயங்கொளப் பாடுவார்
விப்பிரர் மேன்மிகு மன்புடையா ரவர்
வேண்டுமட்டுங் கொடுக்குங் கொடையார். [37]

உன்னத மேடையி னிற்களிப்பார் விண்
ணேடு நதியினி லேகுளிப்பார்
சன்னவிடையார் முகமேயு மதி
சாளரத் தூடுவந் தேதேயும். [38]

தூக்கிய வெள்ளைச் சாலாந்தர் மதிக்
தோற்ற மென்பார்கள் கவிவேந்தர்
ஆக்கமிகுந்திடுந் தேட்டினு ரா
னடியர் தேவாரப் பாட்டினர், [39]

தேவர் தினந்தோறுங் கூடியே தொழு
தேற்றுஞ் சிவாலயங் கோடியே
பாவங் கனவிலு மெண்ணுரே சிவ
பத்தரின்றி நித முண்ணுரே. [40]

வீடுதோறும் விசைக் காற்றுடி காந்த
விளக்கொளி ருும்பல கோடி
பீடுபெறுநிலைக் கண்ணாடி விலை
பெற்ற படங்கள் மிகமோடி. [41]

பீட்டன்சாரட்டு மோட்டாக்காரே யன்றிப்
பெட்டு வண்டியுங் கூட்டாக்காரே
நாட்டனை வெல்லு மதியாரே துர்ச்ச
ஞளுறவைச் சம்மதி யாரே [42]

சந்தம் வேறு.

அமராபதிவள மேவியவழகாபுரி யெனுமாநக
ரதன்மேன்மையை யாவர் சொல்வாரடி
அணிமேவிய தமிழார்தரு பொதிகாசல முனிபாரதி
யயனேதினுமே முடியாதடி. [43]

இந்தவிதவள மேவுந்தேவைப் பதி
யினி லுறையும் வணிககுல
சுந்தரனை நாராயணன் மேன்மையைச்
சொல்லுகிறேன் கொஞ்சங் கேளுங்கோடி. [44]

அவ்வை கவியைமுன் னேத்தினர் கன
காம்பர மவட்குச் சாத்தினர்
கவ்வையார்பொன்னிநதிமேலே கறை
கட்டினர் பஞ்சுப் பொதியாலே. [45]

தங்கச் சவுடியைப் பாரியர் புனற்
ருும்பாய்க் கொளவருள் சீரியர்
துங்கக் கயநிருத் துரைத்தவர் கண்ணூற்
றாண்கள் பவளத்தா னிரைத்தவர். [46]

மாறனுக்கு முடிசூட்டினர் பிச்சை
மாணிக்க மிட்டிசை யீட்டினர்
ஆறனுகுங் கடல்விடுத்தனர் பொனி
னற்செய் கொழுமனை யெடுத்தனர், [47]

மேவுமிவாதி விட்டினங் கூறு
வேன்கா வேரிப்பூம் பட்டினம்
வாவுபரித் தென்னன் மேவருமவா
வைத்தழைக்க வந்தார் யாவரும். [48]

சிந்தைக் கிசைந்தவரமுதவி யென்றுஞ்
சேயனையே நிகராய்க் கார்க்கும்
எந்தைமரகதப் பிள்ளையாரே யென
வேற்றித் தொழுது வணங்கிடுவோர். [48]

திங்கட் குலகோத்ர வைசியராமென
செப்புமிப் பெரும்புகழ் படைத்த
துங்கமிகுந்த விவர்கள் மரபினிற்
றோன்றிய சற்குண சீலனடி. [50]

ஆதித்தன் குலத்திலுற் பவித்த வன்பி
னாலிவன் றேவையளிப் போமென
வாதித்தன் வந்துபிறந்தது போலவிவ்
வம்புவியிற் புகழ் கொண்டுதித்த [51]

பாற்கர சேது பதிமஹாராஜா வன்
பாகவழைத்து மன துவந்தே
யேற்க வுனக்குயர் கண்ணங்குடியுட
னிரவு சேரியுமீந்தனட் யாம். (52)

தேவை நகருக்குக் காவலனாகிச்
சிறந்திடுவா யெனப்பேற் றோனாங்
காவைநிகர் தருமராமஸாமி வள்ளல்
கண்மணி யானபுதல் வர்களில். (53)

கானரஸமுங் கவிரஸமுந் தெரி
காவலனா மருணாசல வேள்
ஞானமிகு சொக்கலிங்கம் வெள்ளையனா
நன்னுமிவர்களின் பின்னுதித்தோன். [54]

மதுராஞ்சித சதுரசுந்தர வசனனம் புயவதனனிங்கித
மதனனின் புருசுகுணமொன்றிய வாகனே
விதுரனன்று தவியவிருந்துணை வெளிவருந்திருவினை மணந்தருள்
விமலனென் றுரைதருவினுந் தருத்யாகனே. (55)

தாலமெங்கு முயர் சப்டிவிஷன் ஜமீந்
தாரெனப் போற்றவே தர்மபரி
பாலனம்பண்ணு நாராயணன் றன்னெழில்
பகரக் கேளடி மாதரசே. (56)

மாமதிபோ லொளிர்முகத்தினான் மதி
மன்னவர் மேவு சமுகத்தினான்
தாமரையாகிய வங்கையா னெண்ணித்
தானியற்றிடு தவங்கை யான். (57)

மாமலர் மேவைங்கணையானே கெட்ட
மார்க்க மென்றுலங் கணையானே
நாமருவு பலகலையினா னிடை
நண்ணு பீதாபரக்கலை யினான். (58)

மேருமலை நிகர்வாகனே யொன்னார்
மேவிடினும் திரு வாகனே
பாருறுங் கெம்பீர வாக்கினா னருட்
படியுங் கமல நோக்கினான். (59)

தஞ்சமென் றோரைக்காப் பாற்றுவா னெதிர்த்
தாருக்கிருப்புக் காப்பாற்று வான்
வஞ்சங் கனவிலுமுன்னானே மற்ற
வணிகருக்கிவன் முன்னானே. (60)

வர்த்தகஞ் செய்யமலையானே மனை
மன்னிய செம்பொன் மலையானே
அர்த்தமிகுங் கவிபாடுவான் றன
தாக யாரையுங் காப்பாடுவான். (61)

சீர்த்திமிகுந் தேவகோட்டையா னெவர்
செப்பினு மவர்தங்கோட்டை யான்
ஆர்த்தியுறுங் காமவேட்டை யானோர்க்கு
மஞ்சாமற் செல்ராஜ பாட்டையான். (62)

பொழில்புடை சூழும்வீட்டினன் முனம்
பொன்னிலங் கேசனை வீட்டினன்
எழில்மிகு முறுப்பணியினன் காளை
யீசர்க்குச் செய்திருப்பணி யினன். (63)

கல்லைப்பெண் ணாங்கியகாலினன் கர
கமலத்திற் சுடர் வேலினன்
றெல்லைக் காளீசரின் வாத்தினன் கோடித்
தொகையாகிய பொன் வரத்தினன். (64)

சத்தியத்தி லரிச்சந்திரன் பூவி
தனக்கு நிகரிலிந் திரன்
நத்தியிடு மனதானத்தான் பிறர்
நாரியரை மனதானத்தான். (65)

மயிலுகந்தோன் மாமன்ப் ரதிட்டைசெய்து
மகிழ்ந்து பூஜை புரிந்துபணி
வெயிலுகந்த விநாயகர்க்கு முயர்
விசாலாக்ஷி விஸ்வநாதருக்கும்- (66)

மான்மிய மேவுமுப் பூரிற்றிருவிழா
வருஷந் தோறு நடத்திவரு
பான்மையை யென்ன சொல்வேனடி முன்னோர்
பார்த்து மகிழச் செய்வானடி (67)

பாதிரா வேளையில் வந்தாலு மவர்
பசிதீர நள பாகமதாய்க்
கியாதி பொருந்தவுப் பூரினிற் சத்திரங்
கட்டி யனமிடுஞ் சீலனடி (68)

148166
சென்னை-600 008.

ராமநாதர் கோவிற் கட்டியே தீரும்
நானிலத் தேததற் கட்டியே
மாமலை யொத்த கரத்தாரே யிந்த
வள்ளற் கிணையிச் சகத்தாரே. (69)

விண்ணினின் றுந் தருவித்தானோ சொலு
வீரென்று கேட்கும விதமாக
மண்ணி லகுங்கானை யானைமடு மைய
மண்டபங் கட்டிப் புகழ்படைத்தான். (70)

மாலையிற் பீடனி லேறியே வரும
வழிமி ஞர்மயல் மீறியே
சாலையி டமெங்குங் கூடுவார் சுகந்
தாவெனப் பற்றி யோடுவார். (71)

கொங்கையைத் திறந்து காட்டுவார் கருங்
குழலை யவிழ்த்துச் சூட்டுவார்
சங்கை யறக்கேலி பேசுவார் இந்தச்
சாடை யறியாயென் றேசுவார் (72)

அடிபி ரமபுகொண் டொருகையி லழ
காகப் பவனி வருகையில்
வடிவில் மதனுந் தோற்றனே யந்த
மானத்தா லினமுந் தோற்றனே (73)

மன்னர் திறையிடும் வாயிலா னிதம்
வணங்கு மாற்றாருக் கோயிலான்
கன்னனெனத் தருங்கொடையினன் மணங்
கமழுஞ் சிரகத் தொடையினன். (74)

வச்சிரங் கோமேதகம் பவள முத்து
வைடூரிய முதலா மணிகள்
உச்சிதமாக வுபரிகையிற் குவித்
துவந் திருக்குந் தனதனடி. (75)

O-85MMD5
X14

வங்காளஞ் சிங்கப்பூர் நேபாளம் வர்மா
மதுரை தொண்டி மலையாளம்
ரெங்கோன் கொழும்பு பினுங்கு மோர்மானிலும்
ரம்யமாகச் செய்போன் வர்த்தகத்தான். (76)

வண்டியிற் பற்பலகிராமங்களி னின்றும்
மலைமலை யாய்க்குவித் திடவே
கண்டு கண்டிந்த நெல்லெந்தக் கிராமங்
கணக்கரே சொல்லு மெனக்கேட்போன் (77)

காலையுமாலையுங் கீதமே யிளங்
கன்னியர் சதிர்ப்ரமாதமே
வேலைபோன் மேளத் தினாதமே
யெங்குமே விடுமென்ன வினோதமே. (78)

கூடித்தொழுவோர் தம்பாபமும் போக்குங்
கோடிக் கணக்கான தீபமும்
சோடித் திடுமெழிற் றெப்பமும் விணிற்
றோய் மையமண்டபச் செப்பமும். (79)

நாட்டாரைக் காலையிற் கூட்டுவான் அறை
நாழிகையிற் றேரை யோட்டுவான்
தேட்டார் வணிகரி னீட்டமெ யுணச்
செய்யுஞ் சமையலி தேட்டமே. (80)

சேட்ட ருடனிவன் கூடியே கானத்
திருவிழாச் செயு மோடியே
வேட்டனு தினமும் நாடியே விணின்
மேவிடு வாரும்பர் கோடியே. (81)

அந்தணர் மன்னர் கவிவாணர் சிவ
னன்பர் சகோதரர் பந்துஜனம்
மைந்தர் கணக்கருடன் கூடி யென்றும்
மகிழ்ந் திருக்குஞ் சமுகனடி (82)

சுந்தரமான மதிவதனன் புயல்
தோற்க்கும் படிக்கித்தருதனதன்
மந்தரம் போலுபர் வாகன் பி. ச.
மாவிலாஸ வருணுசல மால். (83)

பூமியெங்கும் புகழ் பெற்றவனிதம்
புண்ணியஞ் செய்திடக் கற்றவன்
வாமி மலர்ப்பதம் போற்றுஞ் சி. த.
வள்ளல் வயிரவனு மகிபன் (84)

கூடலிற் பாடகசாலே வைத்து மாலின்
கோயிற் றிருப்பணியும் புரிந்தோன்
பாடலார்கானுடு காத்தானில் வாழ்மகி
பன் க. வெ. சிதம்பரவேள். (85)

மண்டலத் துள்ள கவிவாண ரக
மகிழ்ச் செம்பொன் மழைபொழியுங்
கொண்டல் நிகர்முகவாபுரி மேவிய
கொற்றவனும் புகழ் பெற்றவனும். (86)

பாற்கர சேதுபதி மகாராஜாவின்
பாலகனுக வவதரித்த
மாற்குநிகர் முத்துராமலிங்க மன்னன்
மகிழ்ந் திருக்குஞ் சினேகனடி. (87)

சிந்துமது மலர் கொண்டுமே யனு
தினமுந் தேவாரம் விண்டுமே
வந்துவந் தன்பர் பணியுந் திருப்புனல்
வாயில் மருவும டாதிபனும். (88)

நாவார வேதாகம புராணங் கலே
ஞானமுடன்றிரு வாசகமுந்
தேவாரமும் புகலும் பரமேஸ்வரத்
தேசிகர் பானுப தேசமுற்றேன். (89,

மன்னிய விவ்வள மேவுநாராயணன்
மனமகிழக் கும்மி யடிக்க
வின்னிசைச் சந்தந் தெரிந்து புகன்றிடு
மேந்திழை யாவரும் வாருங்கோடி. (90)

ஆரந் திகழுஞ் சடையாரே மல
ரன்னந் தொடரு நடையாரே
பாரமிகுந்த முலையாரே பள
பளத்த கெண்டைக் கலையாரே. (91)

வேலைப் பழித்த விழியாரே மிக
வியக்கு முந்திச் சுழியாரே
வாரைக் கிழிக்குந் தனத்தாரே வடி
வத்தின் மிகுமெவ் வனத்தாரே. (92)

முல்லை யரும்பெனும் பல்லாரே யதி
மோகன ரஞ்சிதச் சொல்லாரே
வில்லை நிகர்புரு வத்தாரே சந்த்ர
விம்பத்தை யொத்த முகத்தாரே (93)

அன்புமிகுந்த விசாலாக்ஷி யென்னை
யாண்டவள் பேர்கொண்ட மீனாக்ஷி
இன்ப ரசந்திகழ் தேனாக்ஷி நீ
ரிரண்டொரு பெண்களும் வாருங்கோடி. (94)

காம ரஸவல்லி போகவல்லி கன
காம்பர வல்லிவி வேகவல்லி
நாமருவுஞ்சொ லமுதவல்லி நீங்கள்
நாலைந்து பெண்களும் வாருங்கோடி (95)

சுந்தரி சீதைய பிராமி ரதி
சொன்னங் கமலஞ் சிவகாமி
யந்தரத் தோர்புகழ்காஞ் சனமாலை நீ
ராரேழு பெண்களும் வாருங்கோடி (96)

மாணிக்க முத்து மரகதஞ் சங்கரி
மாதங்கி கீதகு ணசாலி
ஏணிநிகர் விழிக் காந்திமதி நீங்க
ளெட்டொரு பெண்களும் வாருங்கோடி. (97)

வேலைநிகர்விழி யம்பிகை சண்பகம்
வித்தகி நாரணி கௌமாரி
பாலைவெனு மொழிப் பாகீரதி நீங்கள்
பத்துப் பெண்களும் வாருங்கோடி. (98)

கன்னிய ரெல்லாருங் கூடினார் சரி
கம பதவென்று பாடினார்
மன்னிய பூந்தட நாடினார் புனல்
மகிழ்வுடன் விளையாடினார். (99)

சந்தம், வேறு.

மங்கையர்மு கங்கைநிகர்
பங்கயங்க ளலைய விடை
தங்கு துகிற் குலைய
மதுர விசைதரு மளிகள்மலரி னின்றுங் கலைய
கங்கையினிற் றங்கிய செங்
கனகநிகர் காந்தி யிளங் கன்னியர் புனல் நீந்திக்
கருவிழியி னிமலதனைக் கயலினமென் றேந்தி. (100)

நத்தினங் கண் டத்தினைக் கண்
டத்தனையுந் துன்னி
யிணை நாமிலவென் றுன்னி
நளிர்கருஞ் சேற்றிடை யொளியநாடி யுரைபண்ணி
நத்திவருந் தத்தையர்கள் மெத்தவிளை யாடி
யிள நகையார் கரை கூடி
நயமான கலையுடுத்திப் பணிகள்தனைத் தேடி. (101)

காதலுடனே வயிரக் கம்மலைக்கை யெடுத்து
வளைக் கனமதனிற் றொடுத்து

கண்டசரம் பவுன்மாலை கண்டமதின் மடுத்து
சூதனைய துணைமுலைக்குத் தூயகச்சுப் புனைந்து மிகச்
சுடர்கொள் வங்கி வனைந்து
துடியிடையிற் கனக வொட்டி
யாணமிட்டார் நினைந்து. (102)

காந்தள் மலர் நிகருமிரு கரங்களுக்குத் தக்க
விலைக் காப்பணிந்து மிக்க
கவின் மிகும்பாட்டடற் கொலுசு
களையிட்டார் சொலிக்க
தேந்தருசீ தளநளினச் சேவடிக்குத்
தண்டையொலி சிலம்புமத னண்டை சேர்த்து நுதற்
றிலதமிட்டுச் செறித்தார் மலர்க்கொண்டை. (103)

சந்தம், வேறு.

மான் விழிக்கி மைதிட்டி
மான்கள் மனதையும் வாட்டி
கான்மிகு களப்பம் பூசி
கன்னியர்கள் கை வீசி (104)

அஞ்ச மெனவே நடந்து
யந்தணர் வீதி கடந்து
மஞ்சளாயு மணி மாட
மன்னவர் வீதியுங் கூட. (105)

காராளர் வீதிகளுங்
கற்றோர்கள் வீதிகளுஞ்
சீராருஞ் சோலைகளுஞ்
செய்யு மன்ன சாலைகளும். (106)

சிங்கார மேடைகளுஞ்
சிறந்தமல ரோடைகளுங்
கொங்காரு மலர்த்தடமுங்
கூடுபெரி போர்மடமும். (107)

சித்தாந்த வேதாந்தந்
தேர்ந்த பெரியோரிடமும்
முத்தாந்தந்தத் தையலர்
மோகமுடனே கடந்து. (108)

சீராருங் கோபுரமுந்
திருமதிலுங் கோவில்களும்
நேராகக் கண்டு கண்டு
நின்று துதி செய்துகொண்டு (109)

சந்தம், வேறு.

தண்டை கொலுசு சிலம்பொலிக்க விடை
தன்னிலொட் டியாணம் ப்ரபை சொலிக்க
கெண்டை விழிமாகர் நாராயணேந்த்ரன் முன்
கேகயம் போல நடிக்கலுற்றார். (110)

மாமதி போல முகமிலங்க வொளிர்
மாணிக்கத்தாற் செய்பணி துலங்க
தேமலணியுந் தனமசைய விசைச்
செந்தமிழ்ச் சந்தத் தினுக்கிசைய. (111)

பூசுங்களபம் பரிமளிக்க விசைப்
புத்தமுத முண்டுளங் களிக்க
தேசுறக் கும்மிபடித் தாரே யெங்கள்
சீமான் மகிழ நடித்தாரே. (112)

மாதர்களின் னடங் கண்டு நாராயண
மன்னவன் மெச்சி மிகப்புகழ்ந்து
மேதகையான பட்டாடை யாபரணம்
வெகுமதியாய்க் கொடுக்க லுற்றான். (113)

கோமளைக்கு நெவ்றிச் சுட்டியு முயர்
கோதாவரிக்கிக் கான்.மெட்டியும்
காமாதிக் குக்கல் லோலையுங் கன
காம்பரிக்கு முத்து மாலையும். (114)

கோமதிக்கு மயிர் மாட்டலுங் குண
குஞ்சரிக்கித் தங்கப் பாட்டலும்
பூமதிக்கும் விலைப்பட்டுமே பல
பூஷணங்கள் வேண்டு மட்டுமே. (115)

சந்தந்தெரிந்து நடம்புரிந்த வந்தத்
தையலர் கட்குமிகப் புனைந்து
சொந்தமுட னெவரும் புகழ்ந்திடவே
சொல்கும்மி கேட்ட படியாலே (116)

திங்களரவ மணிந்திடும வேணிச்
சிதம்பர விநாயகன் னருளாற்
றுங்கமிகு மைந்தர் பெற்று நாராயணத்
தோன்றல் மகவான்போல வாழ்வானடி. (117)

பூதலமெங்கும் புகழோங்கக் குமி
புகன்றிடுந் தமிழ்ப் பாரதிக்குக்
காதலுட னுத்திராக்ஷங் கொடி பதக்
கம்மொளிர் கவுரிசங்க மிடல். (118)

காதிலணி வயிரக் கடுக்கன் மலர்க்
கரங்களுக்குத் தோடா முடுகு
சோதிமிகு விரல்மோதிரங் கண்டைத்
துப்பட்டாச் சால்வைகளும் புனைந்து. (119)

செந்நெல் விளைவயலும் விடுவான் றங்கச்
சிவிகை கவிகை யுந்தருவான்
என்னபெரிதடி நங்கூன் னாலா
யிரமுந் தீர்ப்ப தவன்கடன். (120

தண்டமி ழின்பந் தெரிந்திடும் விற்பன
சற்குண னான படியாலே
மண்டல மெங்கும் புகழ்ந்திடவே மத்த
மாவுமுந் தருவனடி (121)

...னும்
...தான்
...ன் மேன்மையைப்
...டி. (122)

...ப ரும்வாழி யான்
...னவ ரும்வாழி
...கில்கள் வாழியறஞ்
...ளிகர்க ளும்வாழி (123)

காவலர்வாழி கலைவாழி யன்பர்
கட்டிய வாலய மும்வாழி
நாவலர்வாழி குடிவாழி யெங்கள்
ராஜ ராஜேஸ்வ ரியும்வாழி. (124)

செந்தமிழ்க்க விப்ரசங்கவன் றொண்டரின்
சிறப்பெ டுத்துப்பு கல்வோர்க்கு
சொந்தம தாகவ ரமருள் மீனாக்ஷி
சுந்தரேஸ்வ ரரும் வாழி. (125)

கண்டடி போற்றுவோர் தம்மைக் கலங்காது
காத்தவி நாயகன் வாழி
கொண்டல் நிகர்குழ லுபயநாச்சியார்
கோதண்ட பாணிரெங் கன்வாழி. (126)

மாவளர் தேவைப் பதிவாழி யதில்
மன்னுவ ணிகர்க ளும்வாழி
காவளர் நாராய ணன்மைந்தர் தம்முடன்
கணப்பெற் றுலகில் வாழியவே. (127)

முற்றிற்று.

இஃது வேம்பத்தூர் சிலேடப்புலி ட

கோவிந்தபாரதி பாடி

---

இராகம் பியாகடை தாளம் ரூ

பல்லவி.

மோகமாகிய தோகைமீதிந்த மோடிசெய்வது ஞ

அனுபல்லவி.

வாகனேதேவை மாநகர் மேவிய

வள்ளல்நா ராயணு வுள்ளந்தனின் மிக

சரணம்.

பாகனையமொழி மாதுபூமலர் பாப்புமமளிமீ துறக்கமேயின்றிச்
சோகமாகியே வாடுறுளகூடிச் சுகிககவுந்தனைத தேம்புறுள

பாகுபாலபழ மும்புசியா துட
னேகுந்தயினி மயனசெய்குமேவ னுயிர்
போகுமோ வென மோவறமேயனடி
தோகையேயென வுஞ்சொலியே மிக (மோக)

தேசுமிகுவத ஞாவிந்தவ சீகரா கிருபாகரா
வீசுபுக்பூபா வச்சவலிங்கர் மேவிடும மடசுமகபா

பூசுவாடை தயர்ந்து நீவிதவி
லாசமாகவ ரும்பாழு தயவள்
வாசலினைறுநி ஞரெழில கண்டுமே
தேசமா மயல் கொண்டு நினைந்ததி (மோக)

இநதுநுதல் விழி சிந்து முறுவன்மு
ழுந்துகளமுடி மவன் னைந்து குளிர மலரப
பந்து முலையிடை தந்து வனிதைப .
சந்தரதியுமே பிந்துவாள்

எந்தனேரமும் நிம்பையின் மேவுகோ
விந்தபாரதி தன்பத மேசொலி
னைந்திவாடும் ஞள்தனை நீயும
னைந்துநாளும கிழந்திடாமன் மிக (மோ)

---